பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 11 | செவ்வாய்க்கிழமை | 25.03.2025 | அதிர்வு 232

## ஜே.வி.பி.யால் ரணிலை ஒன்றும் செய்ய முடியாது!

### சஜித் அணி கூறுகின்றது



"பட்டலந்த ஆணைக் குழு அறிக்கையைக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை இலக்கு வைக்க ஜே.வி.பி. திட்டமிட்டது.

06









# சவேந்திர, வசந்த, ஜகத், கருணா ஆகிய நால்வருக்குப் பிரிட்டன் அதிரடித் தடை!

### போரின்போது நடந்த மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்ற காரணத்தால்

இலங்கையின் முன்னாள் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட நால்வருக்குப் பிரிட்டன் தடை விதித்துள்ளது.

உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு இவர்கள் பொறுப்புக்கூற வேண்டியுள்ளவர்கள் என்று தெரிவித்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

06

# ஐ.நா.வின் செப்டெம்பர் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணை

### சுமந்திரனிடம் பிரிட்டன் பிரதிநிதி பென் மெல்லர் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 59ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை மையப்படுத்திய புதிய பிரேரணையொன்று பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்படவுள்ளது என்று பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின்

06






நேற்று 'மாலை முரசு' முன்பக்கத்தில் தலைப்புக்கு மேல் ஒரு பெட்டிச் செய்தி. 'இலங்கை தொடர்பான பிரிட்டனின் முக்கிய முடிவு அல்லது அறிவிப்பு இன்றிரவு (அதாவது நேற்று இரவு) வெளியாகும்' என்று அந்தச் செய்தி பிரசுரமாகி இருந்தது.

செய்தி வெளியாகி ஓரிரு மணித்தியாலங்களின் பின்னர் மூன்று, நான்கு வாசக நேயர்கள் தொலைபேசி அழைப்பு எடுத்தார்கள்.

'நீங்கள் குறிப்பிட்டபடி இரவாகிவிட்டது. பிரிட்டன் பக்கத்திலிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. உங்களுக்கு வந்ததா?' – என்ற சாரப்பட விசாரிப்பு அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன.

'நிச்சயம் அறிவிப்பு வரும், ஆவலுடன் பார்த்திருங்கள்' என்றேன்.

ஏழு மணி அளவில் நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார். கருணா மற்றும் முன்னாள் படைத் தளபதிகள் மூவர் மீது பிரிட்டன் பயணத்தடை அறிவித்திருக்கின்றது என்ற செய்தியைச் சொன்னார்.

'எதிர்பார்த்த விடயம்தான்' என்று

06



# விபத்துக்குள்ளான கே8 ரக விமானத்தில் எந்த கோளாறும் இல்லை: பிமல் ரத்நாயக்க

வாரியபொலவில் விபத்துக்குள்ளான இலங்கை விமானப்படையின் விமானிகளைப் பயிற்றுவிக்கும் கே8 ரக விமானத்தில் எந்தக் கோளாறும் இல்லை என்பது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

விபத்து தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வாரியபொல மினுவாங்கெட்ட வெலகெதர பகுதியிலுள்ள தென்னந்தோப்பில் இலங்கை விமானப்படையின் விமானிகளைப் பயிற்றுவிக்கும் கே8 ரக விமானம் கடந்த வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளானது.

விபத்தில் இரண்டு விமானப்படை வீரர்கள் காயமடைந்தனர்.

இந்த விமான விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக 07 உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியா நிறுவன நிதி மோசடி வழக்கு; உதய கம்மன்பிலவை விடுவிக்க உத்தரவு



அவுஸ்திரேலிய பிரஜையின் நிறுவனத்துடன் தொடர்புடைய நிதி மோசடி வழக்கில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் மற்றுமொரு சந்தேக நபரை நிரபராதி என விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

போலியான சட்டப் பத்திரம் தயாரித்து விற்பனை செய்து 21 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றத்திற்காகவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் மற்றுமொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டனர்.

நீண்ட விசாரணையின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி நாமல் பண்டார பலாலே இந்த தீர்ப்பை வழங்கினார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க அரசுத் தரப்பு தவறியதால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவை சேர்ந்த வியாபாரி யொருவரின் டிஜிட்டல் நொமினீஸ் தனியார் நிறுவனத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பான் ஏசியா வங்கிக்கு சொந்தமான 21 மில்லியன் பங்குகளை போலி சட்டப்பத்திரம் தயாரித்து விற்பனை செய்ததின் ஊடாக 21 மில்லியன் ரூபாயை நிதி மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் வியாபாரி சிட்னி ஜயசிங்க என்பவருக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தின் போது சட்ட மா அதிபரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

# வாக்காளர் அட்டை அச்சிடும் பணிகள் நேற்று ஆரம்பமாகின

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்காளர் அட்டை அச்சிடும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இதற்கான விபரங்கள் நேற்று முதல் மாவட்ட செயலகங்களினால் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நேற்று அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம், சமன் ஸ்ரீரத்னாயக்க எமதுச் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அனுராதபுரம் வைத்தியர் விவகாரம்:

# பிரதான சந்தேக நபருக்கு மீண்டும் விளக்கமறியல்!

அனுராதபுரம் வைத்தியர் விவகாரம் தொடர்பில் கைதான பிரதான சந்தேக நபர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே பிரதான சந்தேக நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு நீத வான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தே நபரை அடையாளங் காண்பதற்கான அணி வகுப்பு இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெறவில்லை.



சம்பவத்துடன் தொடர்புடைய வைத்தியர் நேற்றும் நீதி மன்றில் முன்னிலையாகவில்லை.

இதன்காரணமாகவே அடையாள அணிவகுப்பு இடம் பெறவில்லை.



# அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வோருக்கு எதிராக நடவடிக்கை



எதிர்வரும் பண்டிகை காலத்தை இலக்கு வைத்து அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காண்பதற்கான சுற்றி வளைப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பல்வேறுபட்ட இடங்களில் அதிகரிக்கப்பட்ட விலைகளின் கீழ் சில வர்த்தகர்கள் மற்றும் ஆலை உரிமையாளர்கள் அரிசியினை விற்பனை செய்வதாகவும் அரிசி தொகையைப் பதுக்கி வைப்பதாகவும் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் நிறைவடைந்த காலப்பகுதியினுள் அதிக விலைக்கு அரிசியினை விற்பனை செய்த ஐந்நூறுக்கும் அதிகமான வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.



# சிவனொளி பாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த நபர் ஒருவர் சுகவீனத்தினால் மரணம்

(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளி பாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த நபர் ஒருவர் இடைவழியில் சுகவீனத்தினால் மரணம். அடைந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்று உள்ளது.

இவ்வாறு மரணித்தவர் மொரட்டுவ பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு சிவனடி பாத மலைக்கு தரிசனம் செய்ய சென்ற வேளையில் ஊசி மலை பகுதியில் வைத்து திடீர் என சுகவீனம் காரணமாக உறவினர்கள் நல்லதண்ணி நகருக்கு அழைத்து வந்து அங்கு இருந்து அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு வரும் வேளையில் உயிர் இழந்தது உள்ளார் என மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் உள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு மரணித்தவர் மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த 62 வயது உடைய அனுர குமார பெர்னாண்டோ என்பவராவார்.

அவரது உடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் உள்ள சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற் கூற்று பரிசோதனை மேற்கொண்ட பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்க பட்டது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.



# இலங்கை - அவுஸ்திரேலியா பேச்சுவார்த்தை இன்று ஆரம்பம்



இலங்கை – அவுஸ்திரேலியாவிற்கு இடையிலான ஐந்தாம் கட்ட பேச்சுவார்த்தை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, சமுத்திர ஒத்துழைப்பு தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது.

இந்த பேச்சுவார்த்தை அவுஸ்திரேலியாவின் கென்பரா நகரில் இன்றும், நாளையும் நடைபெறும்.

இதற்கு இணையாக இருநாட்டு மூலோபாய சமூத்திர கலந்துரையாடலின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# ஓட்டோ மோதி சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் சென்றவரை ஓட்டோ மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நாவற்குழி, புதிய குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான அந்தோணி றில்மன் டெனிஸ் (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நாவற்குழி – பூநகரி வீதி வழியாக மனைவி ஒரு சைக்கிளில் முன்னே செல்ல உயிரிழந்த கணவன் பிறிதொரு சைக்கிளில் 10 மாதக் குழந்தையை முன் கூடையில் இருத்திச் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த ஓட்டோ, சைக்கிளை மோதி தலைகீழாகப் புரண்டது.

இதன்போது குழந்தை தூக்கி வீசப்பட்ட நிலையில் சிறு காயம் ஏற்பட்ட நிலையில் தப்பித்தது.

தந்தை படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4:30 மணியளவில் சிகிச்சை பலனன்றி உயிரிழந்தார்.



இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நான் கூறினேன்.

'முதலிலேயே – முற்கூட்டியே – உங்களுக்குத் தெரிந்திருந்தால் இந்த விடயங்களை உங்கள் செய்தியில் சற்றுக் கோடி காட்டி இருக்கலாமே?' – என்று அவர் கேட்டார்.

நான் சிரித்தேன்.

'செய்தி மூலங்கள் முக்கியமானவை. அவை பொன் முட்டையிடும் வாத்துக்கள். அவற்றை கழுத்தைத் திருகிக் கொன்று விடக்கூடாது. ஒவ்வொரு முட்டையாக பெறுவதற்குக் காத்திருக்க வேண்டும். அதுபோல இந்தச் செய்தி விடயங்களை – தகவல்களை – நேரடியாக தந்த தரப்புகளுக்கு எங்கள் செய்திகள் மூலம் சிக்கல் வேண்டித் தந்து விடக்கூடாது. ஆகவே விடயம் தெரிந்திருந்தும் அமைதி காத்தேன்.' – என்றேன் நான்.

யார் அந்தச் செய்தி மூலம் என்று கேட்டார்.

'செய்தி மூலத்தைக் காட்டிக் கொடுக்க முடியாது.' என்று நான் சிரித்துக் கொண்டு கூறினேன்.

அவர் ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் அழைப்பு எடுத்தார்.

'நான் உங்கள் செய்தி மூலத்தைக் கண்டுபிடித்து விட்டேன்!' – என்றார் அவர்.

'அப்படியா? நல்லது. யார் அவர்?' என்று கேட்டேன்.

'நேற்று மாலை உங்கள் மாலை முரசு பத்திரிகை வெளியாகும் சமயத்திற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர்தான் பிரிட்டனில் இருந்து வந்திருக்கின்ற மிக உயர்ந்த மட்ட ராஜதந்திரி பென் முல்லரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சந்தித்திருக்கின்றார். அந்த விடயத்தை முகப்புத்தகத்தில் அவதானித்தேன். அவர் மூலம்தான் உங்களுக்கு இந்தத் தடை உத்தரவு பற்றிய அறிவிப்பு நேரத்துடன் வந்திருக்கும்' என்றார் அவர்.

நான் ஓமென்றும் பதில் சொல்லவில்லை. இல்லை என்றும் பதில் சொல்லவில்லை. சிரித்து நாசூக்காகச் சமாளித்துத் தொலைபேசி அழைப்பைத் துண்டித்துக் கொண்டேன்.

சில செய்திகள், தகவல்கள் நேரத்துடன் தெரிய வந்தாலும், செய்தி மூலங்களை நெருக்கடியில் மாட்டி வைக்காமல் இருப்பதற்காக நாங்கள் அமைதி பேணவோ நாசூக்காகக் கோடி காட்டுவதுடன் ஒதுங்கிவிடவோ வேண்டிய தேவை இருக்கின்றது.

இந்த விடயத்தில் இரண்டு அம்சங்களை மேலதிக ஊகிப்பாக முன்வைத்து இன்றைய பத்தியை முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஒன்று – இத்தகைய தடை உத்தரவு பிரிட்டனுடன் அமைந்து விடப் போவதில்லை. பொறுப்புக் கூறலை நிலைநாட்டவும், சர்வதேச நியமங்களுக்கு அமைவாக சட்ட விசாரணைகளை ஆரம்பித்துத் தொடரவும் கொழும்பு மேலும் தாமதிக்குமானால், இத்தகைய தடை உத்தரவுகள் பிரிகேடியர்கள், கேர்ணல்கள் மட்டம் வரை விஸ்தரிக்கப்படலாம். மேலும் பல நாடுகளினால் முன்னெடுக்கப்படலாம்.

அதுவும் பிரிட்டன், கனடா, அமெரிக்கா தாண்டி வேறு சில நாடுகளினாலும் இத்தகைய தடைகள் அறிவிக்கப்படலாம்.

அடுத்தது – துணைப் படையாக இயங்கிய குழுக்களில் கருணா தடை விதிக்கப்பட்ட முதலாவது நபர். அந்தத் தடை அவரோடு அடங்காது. பக்கத்தில் அரசியல் செய்யும் இன்னும் பலர் பக்கமும் அந்தத் தடை பாயக்கூடிய ஆபத்து உண்டு.

ஏற்கனவே முன்னைய ராஜபக்ஷ அரசு பொய்யான கடவுச்சீட்டுடன், இலங்கை வெளிவிகார அமைச்சின் குறிப்புத் துண்டுடன் கடிதம் அனுப்பி, கருணாவுக்கு வேறு பெயரில் பிரிட்டிஷ் விஸா பெற்றுக் கொடுத்து பிரிட்டனுக்கு அனுப்பி வைத்திருந்தது கொழும்பு. அங்கு குட்டு அம்பலமாகி, ஆறு மாதத்திற்கு மேல் சிறையிலிருந்து விட்டு திரும்பியவர் கருணா.

ஏற்கனவே கிழக்கு இலங்கையில் சில கொலைகள் தொடர்பாக நீண்ட காலம் விளக்க மறியலில் இருந்த இன்னொரு துணைப்படை தலைவர் இத்தகைய தடை பட்டியலில் வருவதற்கு காத்திருக்கின்றார் என்றும் ஒரு தகவல் உண்டு.

அதடை நடைமுறைக்கு வர முன்னர் அவர் மேற்கு நாடுகளை ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு வருவது அவருக்கு நல்லது. காலம் தாமதித்தால் அந்த வாய்ப்பே அவருக்கு இல்லாமல் போகலாம்.

---

## ஜே.வி.பியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆனால், தற்போது அந்தப் பொறியில் ஜே.வி.பி.யே சிக்கிக் கொண்டது. இந்த அறிக்கையைக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த தேர்தல்களில் பெற்றுக் கொண்ட வெற்றியை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தக்க வைத்துக் கொள்வதற்காக அரசு மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது.

அன்று வழங்கிய வாக்குறுதிகளே இன்னும் நிறைவேற்றப்படாமலுள்ள நிலையில் தற்போது இந்தத் தேர்தலை இலக்காகக் கொண்டு மீண்டும் பொய்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றாவிட்டால் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்றும், மத்திய வங்கி பிணைமுறி கொள்ளையர்களைக் கைது செய்ய முடியாது என்றும் அரச தரப்பினர் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

நாட்டு மக்கள் அந்தளவுக்கு முட்டாள்களா? நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் நாடாளுமன்றத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. மாறாக பிரதேச சபைகளின் ஊடாக அல்ல.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியடைந்தால் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்என்றுஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு, ஏமாறுமளவுக்கு மக்கள் முட்டாள்கள் அல்ல என்பதை இந்த அரசு புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தேர்தலில் அரசுக்கு மக்கள் சிறந்த பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்கள்.

159 தேசிய மக்கள் சக்தியின் ஆசனங்களால் நாடாளுமன்றம் நிரப்பப்பட்டுள்ளது. அவ்வாறு மக்கள் ஆணையை வழங்கியும் இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையைக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை இலக்கு வைக்க ஜே.வி.பி. திட்டமிட்டது. ஆனால், தற்போது அந்தப் பொறியில் ஜே.வி.பி.யே சிக்கிக் கொண்டது.

1980களில் ஜே.வி.பி. செய்த மனிதப் படுகொலைகள், ஏற்படுத்திய கலவரங்கள் இன்று பேசுபொருளாகியுள்ளன. இதனால் கடந்த தேர்தல்களில் இவர்களுக்கு வாக்களித்த மக்கள் தமது தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளனர்.

எனவே, பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையைக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இவர்களால் எதுவும் செய்ய முடியாது."

– என்றார்.

---

## சவேந்திர, வசந்த,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முன்னாள் பாதுகாப்புப் படைகளின் பிரதானியும்முன்னாள்இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த ஃப்லீட் வசந்த கரன்னாகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகளில் ஒருவரான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கே பிரிட்டன் தடை விதித்துள்ளது.

அதற்கமைய இவர்கள் நால்வரும் பிரிட்டனுக்கான பயணங்களை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பிரிட்டனுக்குள் சொத்துக்களைச் சேகரித்து வைப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போரின்போது இடம்பெற்ற சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்படி நால்வரும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளவர்கள் என்று தெரிவித்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ள செய்தி பிரிட்டன் அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## ஐ.நா.வின் செப்ரெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தோ – பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி எம்.ஏ.சுமந்திரனிடத்தில் தெரிவித்தார்.

அத்துடன், அவர், வடக்கு,கிழக்கில் உள்ள நிலைமைகள் மற்றும் புதிய அரசின் செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தியிருந்ததோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கீழ் செயற்படும் சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையின் கால நீடிப்பு தொடர்பிலும் பரஸ்பர கருத்துக்களைப் பகிர்ந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ – பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லருக்கும், எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்றிருந்தது.

இதன்போது, முதலில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பிலான தீர்மானத்தை பிரதான அனுசரணையாளர் என்ற வகையில் பிரித்தானியா தலைமை தாங்கிக் கொண்டுவரவுள்ள விடயத்தை பென் மெல்லர் பகிர்ந்தார்.

அத்துடன், குறித்த

07

# சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி சாவு!

(எஸ்.ரகுதீஸ் )

வீதியைக் கடந்தபோது சைக்கிள் மோதியதில் படுகாய மடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

மன்னார், பேசாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளைகளின் தந்தையான அன்ரன் பெனாட் லோகு (வயது 57) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர், கடந்த சனிக்கிழமை இரவு 8 மணி யளவில் காணாமல்போன மாட்டைத் தேடிச் சென்று மாட்டை பிடித்துக்கொண்டு பேசாலை – தலைமன்னர் வீதியைக் கடக்க முற்பட்டபோது அவ்வழியாக வந்த சைக்கிள் மோதியதில் தலையின் பிற்பகுதியில் அடிபட்டு வீழ்ந்தார்.

அவர் உடனடியாக பேசாலை வைத்தியசாலைக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மன்னர் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தார்.


இந்த மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சி களை பேசாலை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## ஐ.நா.வின் செப்ரெ...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

பிரேரணைக்கு இலங்கை அரசின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப் பட்டுள்ளபோதும் அதற்கான சாதகமான நிலைமைகள் குறைந்தே காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இலங்கையில் "நல்லிணக்கம் பொறுப் புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை" நடை முறைச் சாத்தியமாக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளை



யும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் புதிய பிரேரணையைக் கொண்டு வருவதில் பிரித் தானியா கொண்டிருக்கின்ற அர்ப்பணிப்பை வரவேற்ற சுமந் திரன், அதற்கான அவசியத்தையும், சர்வதேச தளத்தில் வைத்திருக்க வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டையும் பகிர்ந்து கொண்டார்.

விடேசமாக தற்போதைய அரசு கடந்த கால தவறுகளை சரி செய்து முறைமை மாற்றத்தையே மையப்படுத்தி ஆட்சி யில் அமர்ந்தது. இவ்வாறான நிலையில் அந்த அரசாலேயே அதற்கான இலக்குகளை முன்னகர்த்த முடியும் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

அதனையடுத்து, பென் மெல்லர் வடக்கு, கிழக்கு மக்களின் நிலைமைகள் தொடர்பில் கேட்டதோடு, அரசின் செயற்பாடு கள் தொடர்பிலும் சுமந்திரனிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த சுமந்திரன், வடக்கு, கிழக்கு மக்கள் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதோடு அதிகாரங்கள் பகிரப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான நிரந்தி ரமான தீர்வொன்று இனப்பிரச்சினைக்காக முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். அதற்கா கவே அவர்கள் தொடர்ச்சியாக ஆணை வழங்கி வருகின் றார்கள் என்று குறிப்பிட்டார்.

அரசைப் பொறுத்த வரையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக மாற்றங்களை எதிர்பார்த்த மக்க ளுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந்தபோதும் அவற்றை இன்னமும் பூர்த்தி செய்யாத நிலைமைதான் நீடிக் கின்றது என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் செய்யப்பட வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடாக இருக்கின்ற நிலையில், சாட்சி யங்களைத் திரட்டும் பொறிமுறையின் கால எல்லையையும் நீடிக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகவுள்ளது என்றும் சுமந்திரன் மேலும் குறிப்பிட்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது ஆரம்பம்தான்!

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் போது பாரதூரமான உரிமை மீறல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டமைக்காக மூன்று முன்னாள் படைத்தளபதிகள் மற்றும் அரச துணைப் படை குழுவாக இயங்கிய தரப்பின் பொறுப்பாளரான விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா ஆகியோருக்கு பிரிட்டன் பயணத்தடை விதித்திருக்கின்றது.

போக்குவரத்துத் தடைகள், சொத்துக்களை முடக்குதல் உட்பட பல நடவடிக்கைகள் இந்த தடைகளில் அடங்கியுள்ளன என்று தெரிய வருகிறது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் போது சட்டவிரோதப் படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள், கொடூரங்கள் போன்ற மிக மோசமான பாரிய மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டமைக்காக நால்வருக்கும் எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளது.

ராஜபக்ஷ தரப்பினருக்கு கனடாவும், சில படை அதிகாரிகளுக்கு அமெரிக்காவும் ஏற்கனவே தடைகளை அறிவித்துள்ள பின்னணியில் இப்போது பிரிட்டன் இந்தத் தடைகளை அறிவித்திருக்கின்றது.

இலங்கையில் யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட மிக மோசமான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சியங்களைப் பதிவு செய்து பாதுகாக்கும் நடவடிக்கையை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஏற்கனவே மும்முரமாக ஆரம்பித்துள்ள சூழ்நிலையில் - பல லட்சக்கணக்கான ஆவணங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு இருக்கின்றன எனக் கூறப்படுகின்ற சூழ்நிலையில் - இத்தகைய நடவடிக்கைகள் இனிமேல் ஒவ்வொன்றாகக் கட்டவிழும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

பொறுப்பான படை அதிகாரிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், ஏனையோருக்கும் எதிராக நாடுகள் இத்தகைய இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் ஏற்கனவே தனது அவதானிப்பு அறிக்கைகளில் வேண்டியுள்ள பின்புலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் இனி முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது வெறுமனே படைத்தளபதிகள் மட்டத்தோடு அடங்கி விடக் கூடிய விடயம் அல்ல. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப்பான மனித உரிமை மீறல்களை மும்மரமாக முன் நின்று முன்னெடுத்த படையினர் ஒவ்வொருவருக்கு எதிராகவும் - கருணா போல துணைக் குழுக்களாகச் செயற்பட்ட அனைவருக்கும் எதிராகவும் - இத்தகைய நடவடிக்கைகள் நாடுகளால், குறிப்பாக மேற்கு நாடுகளால், தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிகின்றது. இத்தகைய முயற்சியின் ஆரம்பத்தையே பிரிட்டன் இப்போது தொடக்கி வைத்திருக்கின்றது.

இலங்கையில் தேசிய மட்டத்தில் ஒரு குட்டித் தேர்தல் கட்டவிழும் சமயத்தில் இந்தத் தடை அறிவிப்பு வந்திருக்கின்றது. இதனை பௌத்த - சிங்களப் பேரினவாதம் தன்னுடைய பேரின மேலாண்மைக்கு எதிரான மேற்குலகின் மேலாதிக்க செயற்பாடு என்று இனி விமர்சித்து, காட்டமாகக் கெம்பி எழத் தொடங்கும்.

தேர்தலில் வாக்குப் பெறுவதற்காக தென்னிலங்கைக் கட்சிகள் - பிரதான கட்சிகளும் அரசு தரப்பும் - இந்த விடயத்தை இனவாத போக்கில் விமர்சித்து, தங்கள் தளபதிகளை காப்பாற்றுவது குறித்து முழக்கியடிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

நடந்து முடிந்த பேரழிவுகள் தொடர்பில் - யுத்தக் குற்றங்கள் தொடர்பில் - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் தொடர்பில் - மனித உரிமை மீறல்கள் தொடர்பில் - நீதி, நியாயமான, சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, தவறிழைத்தோரை அம்பலப்படுத்தித் தண்டித்து, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தாத வரை சர்வதேசத்தின் கிடுக்குப்பிடி இலங்கை மீது இனிமேல் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும் என்பதுதான் நிலைமை. அதன் ஆரம்பக் குறியீடே - பூர்வாங்க சமிக்ஞையே - இப்போது பிரிட்டன் எடுத்துள்ள துணிச்சலான நடவடிக்கையாகும். தொடர் நடவடிக்கைகளை சர்வதேசத்திடம் இருந்து நாங்கள் தொடர்ந்து எதிர்பார்த்துக் காத்திருக்கலாம்.




# வவுனியாவில் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்திற்கு போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி இடையூறு!

## ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல்





**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் காச நோய் தொடர்பில் விழிப்புணர்வு பேரணி ஒன்றை மேற்கொள்வதற்கு காச நோய் கட்டுப்பாட்டு பிரிவால் ஏற்பாடுகள் மேற்கொள்ள்பட்டன. அச்சமயம் அங்கு வந்த வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி அந்த ஊர்வலத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என வைத்தியர்களிடம் தெரிவித்தார்.

தாம் வன்னிப் பிரதி பொலிஸ் மா அதிபரிடம் நேரத்துடன் இது தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர் என வைத்தியர்கள்தெரிவித்தனர். எனினும்போக்குவரத்து பொறுப்பதிகாரி அனுமதி வழங்க மறுத்தார்.

இச் சம்பவத்தை அங்கு கடமையில் நின்ற ஊடகவியலாளர்கள் இருவர் ஒளிப்பதிவு செய்தனர். இதனையடுத்து அந்த ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் அழைத்து, அவர்களது ஊடக அடையாள அட்டையை பெற்று, அதனைப் பதிவு செய்து அவர்களது நடவடிக்கைக்கு இடையூறை ஏற்படுத்தினார் அவர்.

அத்துடன், அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்த ஓட்டோக்களையும் அங்கு நின்ற போக்குவரத்து பொலிஸாரிடம் கூறி, போக்குவரத்து பொறுப்பதிகாரி ஒளிப்பதிவு செய்திருந்தார்.

எனினும் ஊர்வலம் தொடர்பில் வைத்தியர்கள் பிரதி பொலிஸ் அதிபர், வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் தொலைபேசியில் கலந்துரையாடியதன் அடிப்படையில் போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊர்வலத்திறகுப் பின்னர் அனுமதி வழங்கியினார்.

இதேவேளை, எதச் சம்பவம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனும் பிரதி பொலிஸ் மா அதிபருடன் தொலைபேசியில் உரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# உலக காசநோய் தினத்தில் கல்முனைப் பகுதியில் விழிப்புணர்வு கருத்தரங்கும் சுவர் ஓவியங்களும்!












**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு நேற்றுத் திங்கட்கிழமை கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை சம்மாந்துறை நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.எல். அப்துல் கபூர் தலைமையில் கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையக் கூட்ட மண்டபத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது.


கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் வெளிச்சுவரில் காசநோய் விழிப்புணர்வு ஓவியம் வரைவதற்கு அனுசரணை வழங்கிய அனுசரணையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் வெளிச்சுவரில் கையெழுத்து இடும் பலகை திறந்து வைக்கப்பட்டது. அதிதிகள் மற்றும் ஏனையவர்கள் கையெழுத்து இட்டனர் .

இந்நிகழ்விற்கு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜி. சுகனன், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வாஜித், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சிரேஷ்ட ஆலோசகர்களாக நால்வர் நியமனம்!



சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய சேவைகள் அமைப்பின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணகத்திற்கான சிரேஷ்ட ஆலோசகர்களாக கலஹம தர்மரன்சி தேரர், சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, அல் செய்க் கலாநிதி ஹசன் மௌலானா, அருட் தந்தை நிஷான் குரே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளர்கள் .

இது தொடர்பான நியனக் கடிதங்கள் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய சேவைகள் அமைப்பின் தலைவர் கலாநிதி அமீர்கான் ஏற்பாட்டில் கொழும்பு வெள்ளவத்தை மெரைய்ன் கிரெண்ட் மண்டபத்தில் நடைபெற்ற இஃப்த்தார் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நாடாளுமன்றப் பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.



# மூதூர் ஜின்னாநகர் பகுதியில் நேற்று கருங்கல் ஏற்றி வந்த டிப்பர் விபத்தில்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் மூதூர் ஜின்னாநகர் பகுதியில் கருங்கல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்று நேற்றுக் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

வீதியில் திடீரெனக் குறுக்கிட்ட சிறுவனை காப்பாற்றுவதற்காக டிப்பரை அதிரடியாக - திடீரென - திருப்பியதால்அது குசாய்ந்து விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.



# தமிழ் முற்போக்குக் கூட்டணி அணியே இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் அமோக வெற்றிபெறும்

## அடித்துக் கூறுகின்றார் பழனி திகாம்பரம் எம்.பி.

(க.கிஷாந்தன்)

போலி வாக்குறுதிகளை வழங்கியே தேசிய மக்கள் சக்தி வாக்குகளைப் அபகரித்துள்ளது. எனவே, நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை தமிழ் முற்போக்குக் கூட்டணி அணியே வெற்றிபெறும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான முதலாவது பிரச்சார கூட்டம் நேற்று கொட்டகலையில் இடம்பெற்றது.

இதில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“உள்ளூராட்சிசபைத் தேர்தலில்



தமிழ் முற்போக்கு கூட்டணி நிச்சயம் வெற்றிபெறும். தேசிய மக்கள் சக்தி பொய்யான வாக்குறுதிகளை வழங்கியே வாக்குகளைப் பறித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் விதிகள் மாற்றப்படும் என்றனர். அரிசி மாபியா நிறுத்தப்படும், இறக்குமதி செய்யப்படமாட்டாது எனவும் கூறினார். ஆனால் அது நடக்கவில்லை. மறுபுறத்தில் அபிவிருத்தி திட்டங்களும் இடம்பெறவில்லை.

மலையகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி இந்திய உதவி நிதியாகும்.

நாளுக்கு நாள் பொருள்களின் விலைகள் எகிறி வருகின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் இல்லை.

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடரின் இறுதி நாளன்று ஜனாதிபதி நீண்ட நேரம் உரையாற்றினார். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பற்றி எதுவும் கூறவில்லை.” - என்றார்.



# அமெரிக்கப் பொருள்களின் இறக்குமதிகளை இலங்கை அதிகரிக்க வேண்டுமென ட்ரம்ப் நிர்வாகம் வற்புறுத்தலாம்

## மனோ கணேசன் - தூதுவர் ஜூலி சங் சந்திப்பில் தகவல்

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மற்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு நேற்று நடை பெற்றது. கொழும்பு அமெரிக்கத் தூதுவர் இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மனோ எம்.பியுடன் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினர், ஜனநாயக மக்கள் முன்னணி சர்வதேச விவகார உப தலைவர் பாரத் அருள்சாமி மற்றும் அமெரிக்க தரப்பில் அரசியல் அதிகாரி செச் லோன்ஸ், அரசியல் அலுவலர் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டார்.



இந்தச் சந்திப்பின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அடுத்த வாரம் அமெரிக்க பயணமாக உள்ளார் என் வெளியான செய்தியில் உண்மை இல்லை என அமெரிக்க தூது வர், மனோ கணேசனிடம் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று அமெரிக்காவுக்கு இலங்கை 16 பில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. இது இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 23 விகிதம் என்பதுடன், இலங்கை பொருள்களை அதிகமாக வாங்கும் நாடாக அமெரிக்காவே இருக்கிறது.

இந்நிலையில் இலங்கை அமெரிக்காவில் இருந்து ஆக 370 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களையே வாங்குகிறது. இலங்கைக்கு சார்பாக இருக்கும் இந்த வர்த்தகம் தொடர்பில், அமெரிக்காவில் இருந்து அதிகமான பொருழ்ல்களை இலங்கை வாங்க வேண்டும் என அமெரிக்காவின் புதிய டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் எதிர்பார்க்கலாம் என அமெரிக்க தூதுவர் தெரிவித்தார். குறிப்பாக அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் ஆடை ஏற்றுமதி பொருள்களுக்கான பருத்தி ஆடை மூலப் பொருளை இலங்கை, அமெரிக்காவில் இருந்து அதிகமாக வாங்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மலையக மக்களளின் காணி உரிமை, வீட்டு உரிமை ஆகிய விவாகாரங்கள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெளிவான பார்வையைக் கொண்டிருக்கவில்லை. எனினும் இது தொடர்பில் அவசியமான நெருக்குதல்களை தந்து, நாம் கட்சியாக 2015 ஆம் வருடம் முதல் ஆரம்பித்த காணி, வீடு உரிமை பயணத்தை தொடர அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க முடிவு செய்துள்ளோம் என நான் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினேன்.

தேசிய நல்லிணக்கம், புதிய அரசமைப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்பு, இராணுவம் மீள்-அழைப்பு, காணாமல் போனோர் அலுவலகம், உண்மை ஆணைக்குழு ஆகிய விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் முன்னுரிமை வழங்காமல், முதலில் பொருளாதார சீரமைப்பு என்ற விவகாரத்துக்கே முன்னுரிமை வழங்குகிறது. ஆனால், நாம் பொருளாதார சீரமைப்பு, தேசிய விவாகரம் ஆகிய இரண்டையும் சமாந்திரமாக முன்னேடுக்கும் படி அரசை கோருகிறோம் என நான் அமெரிக்க தூதுவரிடம் கூறினேன்.

மேலும், வெளிநாட்டு முதலீடு, சுற்றுலா வருவாய், ஏற்றுமதி ஆகிய விவகாரங்கள் தொடர்பில் பரஸ்பர கருத்துக்களை தெரிவித்து கொண்டோம். - என்றார்.



# வவுனியாவில் இராணுவமும், பொலிஸாரும் இணைந்து நேற்றுத் திடீர் சுற்றி வளைப்பு

(கி.வசந்தன்)

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் சுற்றி வளைப்பு மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு நபர்களை கைது செய்தல் மற்றும் போதைப் பொருளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த விசேட நடவடிக்கை நேற்று மாலை மேற்கொள்ளப்படடது.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனியின் ஆலோசனைக்கு அமைய வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில் சிரேஸ்ட பொலிஸ் பரிசோதகர் விஜயவனஸ தலைமையில் இந்நடவடிக்கை சுமார் 3 மணி நேரம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா தேக்கவத்தை ஆலடி சந்தியில் இருந்து தேக்கவத்தை மைதானம் வரையிலான பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தல் பிடிவிறாந்து பிறபல்பிக்கப்பட்டவர்களை கைது செய்தல், குற்ச் செயல்கள் தொடர்பில் தேடப்படும் நபர்களை கைது செய்தல், போதைப் போருள் பாவனையை கட்டுப்படுதல் போன்ற திட்டங்களுக்கு அமையவே இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையில், பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# மலையக மக்கள் தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து





(க.கிஷாந்தன்)

“மலையக மக்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான முதலாவது பிரசாரக் கூட்டம் கொட்டகலையில் இடம்பெற்றது.

இதில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

“மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றி முன்னர் பேசிய விடயங்களைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. சம்பளப் பிரச்சினையும் தீரவில்லை. எனவே, இது தொடர்பில் எமது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும், விழிப்படைய வைக்க வேண்டும்.

பட்டலந்த விசாரணை ஆணைக்குழு பற்றி தற்போது பேசப்படுகின்றது. ஜே.வி.பியினர் 54 தொழிற்சாலைகளை எரித்தனர், பல உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர். எனவே, மலையக மக்கள் பட்ட துன்பங்கள் தொடர்பிலும் ஆணைக்குழு வேண்டும்.

இந்நாட்டில் போரின்போதும், ஜே.வி.பி. கலவரத்தின்போதும் எமது மக்கள் தான் கொழுந்து எடுத்து நாட்டுக்கு வருமானம் உழைத்து கொடுத்தனர். கொரோனா காலத்தில்கூட உழைத்தனர். எனவே, எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி பெரும்பான்மையைப் பெறும்.” – என்றார்.




# அரசின் சதித் திட்டங்கள் நிறைவேற தி.மு.க. ஒருபோதும் அனுமதிக்காது

## இஃப்தார் நிகழ்வில் ஸ்டாலின் உறுதி

"வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா இந்திய அளவில் பேசுபொருள் ஆகியிருக்கிறது. சிறுபான்மையின மக்களின் உரிமையை பறிக்கும் நோக்கத்தோடு பா.ஜ.க. இதை கொண்டு வரப் பார்க்கிறார்கள். அதையும் நாடாளுமன்றத்தில் மிக கடுமையாக எதிர்த்து குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறது தி.மு.கவும் அதன் கூட்டணிக் கட்சிகளும்தான். பா.ஜ.க. அரசின் சதித் திட்டங்கள் நிறைவேற தி.மு.க. ஒருபோதும் அனுமதிக்காது."

– இவ்வாறு சென்னையில் நடந்த இஃப்தார் நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை திருவான்மியூரில் தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவிக்கையில்,

"சிறுபான்மையினர்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளை மேம்படுத்த, பல்வேறு திட்டங்களை கடந்த 4 ஆண்டு ஆட்சியில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம். அண்மையில்கூட, தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறோம். இஸ்லாமிய மக்களுக்கான நம்முடைய திராவிட மாதிரி அரசு முத்தாய்ப்பான பல திட்டங்களை செய்திருக்கிறது. இப்படி இஸ்லாமிய பெருமக்களின் சமூகப் பொருளாதார வாழ்வியல் சூழலை மேம்படுத்தும் அரசாக நம்முடைய திராவிட மாதிரி அரசு செயல்பட்டு வருகிறது.

அரசியல் ரீதியாக அச்சுறுத்தல் வரும்போதெல்லாம் இஸ்லாமியர்களைக் காக்கும் காவல் அரணாக இருப்பது தி.மு.க. செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மற்ற மாநிலங்களில் வருந்தத்தக்க சூழல் இருந்தாலும், நம்முடைய தமிழகத்தில் மத ரீதியான வன்முறைகள் ஏற்படாமல், காத்து வரும் அரசாக நம்முடைய தி.மு.க. அரசு எப்போதும் இருந்து வந்திருக்கிறது. குடியுரிமைத் திருத்தச் சட்டம் மூலமாக அச்சுறுத்தல் ஏற்பட்டபோது அதற்கு எதிரான மக்கள் இயக்கத்தை நடத்தி, ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து பெற்று குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தோம்.

ஆனால், இந்த குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த கட்சி தான் அ.தி.மு.க. குடியுரிமைத் திருத்த சட்டத்தை மாநிலங்களவையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்திருந்தால் அந்த சட்டமே நிறைவேறி இருக்காது. ஆனால், தி.மு.கவும் கூட்டணிக் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்தோம். மக்கள் மன்றத்திலும் போராடினோம்.

ஆனால், அன்றைக்கு முதல்வராக இருந்த பழனிசாமி என்ன கேட்டார்? குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் ஒரு முஸ்லீம் கூட பாதிக்கப்பட மாட்டார், யாருக்கு குடியுரிமை பறிபோனது? என்று கேட்டார். இதை சிறுபான்மையின மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள். இப்போது அவர், எந்தக் கூச்சமும் இல்லாமல் இஸ்லாமியர் விழாவில் கலந்துக்கொள்கிறார். ஆபத்து வரும்போது இஸ்லாமியர்களுக்கு எதிராக செயல்பட்டுவிட்டு அந்த குற்றவுணர்ச்சியே இல்லாமல் இப்படி சிலர் இஃப்தார் விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

பொது சிவில் சட்டத்துக்கு எதிராகவும், இது தனிமனித உரிமையை பறிப்பது என்று மத்திய சட்ட ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியது தி.மு.கதான். இப்போது கூட வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா இந்திய அளவில் பேசுபொருள் ஆகியிருக்கிறது. சிறுபான்மையின மக்களின் உரிமையை பறிக்கும் நோக்கத்தோடு பா.ஜ.க. இதை கொண்டு வரப் பார்க்கிறார்கள். அதையும் நாடாளுமன்றத்தில் மிக கடுமையாக எதிர்த்து குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறது தி.மு.கவும் அதன் கூட்டணிக்கட்சிகளும்.

ஒருவேளை அது சட்டமானால், அதை ரத்து செய்ய உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் வழக்கு தொடரப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். பா.ஜ.க. அரசின் சதித் திட்டங்கள் நிறைவேற தி.மு.க. ஒருபோதும் அனுமதிக்காது. உறுதியாக போராடுவோம். உங்களுக்குத் துணையாக எப்போதும் இருப்போம். இப்படி இஸ்லாமியர் உரிமையை காப்பாற்றுகின்றவர்களாக செயல்படுபவர்கள் நாங்கள். இஸ்லாமியர் உரிமைக்கு போராடுகின்றவர்கள், வாதாடுகின்றவர்கள்தான் இப்படியான விழாக்களில் கலந்துக்கொள்ள தகுதி படைத்தவர்கள்."– என்றார்.



# சவுக்கு சங்கர் வீட்டின் மீது தாக்குதல்; எடப்பாடி பழனிசாமி எச்சரிக்கை

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஊடகவியலாளர் சவுக்கு சங்கரின் வீட்டிற்குள் புகுந்த மர்மநபர்கள் அவரது வீட்டில் கழிவு நீர் ஊற்றி வீட்டை சூறையாடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்திற்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“ஊடகவியலாளர் சவுக்கு சங்கர் வீட்டில் அவரது தாயார் தனியாக இருந்த போது, 50 பேர் கொண்ட கும்பல் வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து சில பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

அத்துடன், அவரது படுக்கையறை, சமையல் அறை, சமையல் பொருள்கள் என்று அனைத்துப் பொருள்களின் மீதும் சாக்கடை நீரைக் கொட்டி உள்ளார்கள். இதுபோன்ற கீழ்த்தரமான செயல் மற்றும் தாக்குதல் கண்டனத்திற்குரியது.

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள யாரும் இதை சகித்துக்கொள்ள மாட்டார்கள். உண்மையில் இந்தச் சம்பவம் கொடுமையின் உச்சம். அராஜகத்தின் வெளிப்பாடு. சட்டத்தின் ஆட்சி நடக்கிறது என்று கூறிக்கொள்ளும் தி.மு.கவின் மு.க.ஸ்டாலின் மாதிரி ஆட்சியில் இப்படிப்பட்ட சம்பவம் நடந்தேறியது. மனசாட்சி உள்ள அனைவரும் தலைகுனிந்து வெட்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாகும்.

இக் கொடுமையான செயலை செய்த கும்பலையும், பின்னணியில் உள்ள அனைவரையும் சட்டத்தின் முன்பு நிறுத்தி கடுமையாக தண்டிக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். சட்டப்படி நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில், அ.தி.மு.க. பதவியேற்றவுடன், தூய்மைப் பணியாளர்கள் போர்வையில் இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள், பின்னணியில் உள்ளவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்படுவார்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# டில்லியில் இருந்து சிம்லா சென்ற விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு

டில்லியில் இருந்து சிம்லாவுக்குச் செல்லும் அலையன்ஸ் ஏரின் விமானம் நேற்று சிம்லா விமான நிலையத்தில் தரையிறங்கும் போது பிரேக்குகளில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இமாச்சலப் பிரதேச துணை முதல்வர் முகேஷ் அக்னிஹோத்ரி உட்பட 44 பயணிகள் இந்த விமானத்தில் இருந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்த சிக்கலைச் சரிபார்க்க விமான நிலைய அதிகாரிகள் விமானத்தை ஆய்வுக்காக நிறுத்தி வைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# உத்தேச சமாதான ஒப்பந்தம் தொடர்பில் அமெரிக்க - ரஷ்ய அதிகாரிகள் பேச்சு

உக்ரைனில் அமைதியை நிலை நாட்டும் நோக்கில் அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகளுக்கு இடையே உத்தேச சமாதான ஒப்பந்தம் குறித்து சவூதி அரேபியாவில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

இந்தநிலையில் உக்ரைனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான பிறிதொரு சமாதான பேச்சு வார்த்தை புரிந்துணர்வுடன் இடம்பெறுவதாக உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சு வார்த்தைகள் சுமூகமான முறையில் நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ரஷ்யா தொடர்ந்தும் ஆளில்லா வானூர்தி மூலம் வான் தாக்குதலை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதியில் ரஷ்ய கிவ்வை குறிவைத்து மேற்கொண்ட வான் தாக்குதலில் குழந்தை உட்பட 3 பேர் கொல்லப்பட்டனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உக்ரைனின் பதில் தாக்குதலில் 4 இராணுவ உலங்கு வானூர்திகள் அழிக்கப்பட்டன என உக்ரைனிய இராணுவ தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

# தென் கொரிய பதில் ஜனாதிபதியாக ஹான் டக் சூ மீண்டும் நியமனம்



தென் கொரிய பிரதமர் ஹான் டக் சூவின் பதவி நீக்கத் தீர்மானத்தை அந்த நாட்டின் அரசமைப்பு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ள நிலையில், அவர் மீண்டும் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி யோன் சுக் யோல் இராணுவச் சட்டத்தை அறிவித்தமைக்காக பதவிநீக்கம் செய்யப்பட்டதன் பின்னர் அவருக்கு இந்த பதவி வழங்கப்பட்டது.

இந்தநிலையில், பதில் ஜனாதிபதியாக பிரதமர் ஹான் டக்-சூ நியமிக்கப்பட்டார்.

எதிர்க்கட்சி மீண்டும் பதில் ஜனாதிபதியான ஹான் டக்-சூவுக்கு எதிராகவும் பதவி நீக்கத் தீர்மானமொன்றை கொண்டுவந்ததன் பின்னர் நிதியமைச்சராகப் பணியாற்றி வந்த சோய் சாங்-மோக் பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# திபெத்தில் நில அதிர்வு

திபெத்தில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை ஏற்பட்ட இந்த நில அதிர்வு 4.5 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



# இங்கிலாந்து கடற்கரையில் ஒதுங்கிய மர்ம உயிரினம்!

இங்கிலாந்து கடற்கரையில் மணல் பரப்பில் இருந்த எலும்புக்கூடு போன்ற உருவத்தை கண்டு மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி பவுலா மற்றும் டேவ் ரீகன் இங்கிலாந்தின் கென்ட் பகுதியில் உள்ள கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

அங்கு இந்த எலும்புக்கூடு இருப்பதாக கண்டு, அதனை புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.

இது ஒரு மீனின் வால் மற்றும் வேற்றுகிரகவாசி போன்ற உயிரினத்தின் உடல் மற்றும் தலையுடன் காட்சியளிக்கிறது.

இப்புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.03.2025

## மேஷம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணியில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களின் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாளவும்.

கண்களில் ஏற்படும் கோளாறும் முதுகுவலியும் உங்களை பாதிக்கும்.

## மிதுனம்

இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷயங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

## கடகம்

இன்று வெற்றிகரமான நாளாக அமையும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.

## சிம்மம்

இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப் படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.

## கன்னி

இன்றுநற்பலன்கள்கூடுதலாககிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.

## துலாம்

கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதியின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.

## விருச்சிகம்

இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாகத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.03.2025




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க-ளிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக் கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த் துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண ணத்துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லா வற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வருகை உங் களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டுவீர் கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெறும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும் இன்று நீங்கள் தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நீங்கள் அறிவு பூர்வமாக செய லாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள் வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன் றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிக மாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

# தேர்தல் வழக்குகள் இவ்வாரத்திலேயே விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் சாத்தியம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நம்பிக்கை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக பல சபைகளுக்கு அரசியல் கட்சிகளாலும் ,சுயேச்சைக் குழுக்களாலும் தாக்கல் செய்யப்பட்ட கணிசமான வேட்பு மனுக் கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை இந்த வாரத்திலேயே விசாரித்து தீர்ப்பு வழங்கும் சாத்தியம் இருப்பதாக, அவ்வாறான சில வழக்குகளில் உயர் நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைக்க வுள்ளவர்களில் ஒருவரான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அநேகமாக,அண்மையில் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சித் திருத்தச் சட்டமூலத் தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எழுந்துள்ள சில சட்டப் சிக்கல்கள் தொடர்பிலேயே பல கட்சிகளினாலும், சுயேச்சைக் குழுக்களினாலும் சமர்ப்பிக் கப்பட்ட வேட்பு மனுக்கள் இம்முறை நிராகரிக்கப்பட்டுள்ளன.



இன்று செவ்வாய் கிழமை ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கூட்ட மைப்பு, தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய ஜனநாயகக் கிட்டமைப்பி போன்றவை உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக் கல் செய்யவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார் பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் கட்சியின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மனுதாரராகவும், அவ்வாறே ஶ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸுக்கும் ஐக்கிய தேசியக் கூட்ட மைப்புக்கும் இடையிலானபுரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் அடிப்ப டையில் அக் கட்சிகள் சேர்ந்து போட்டியிடவுள்ள சில சபைகளுக்கான நிராகரிக்கப்பட்டுள்ள வேட்பு மனுக் களைப் பொறுத்தவரை பிரஸ்தாப கூட்டமைப்பின் செயலாளர் எம். நயீ முல்லாஹ் மனுதாரராகவும் இருக்கின்ற நிலையில் அவற்றுக்காகவும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் உயர் நீதிமன்றத்தில் வாதாடவுள்ளார்.

ஏனைய நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் அவற்றின் மனு தாரர்கள் சார்பில் வாதங்களை முன் வைக்க சட்டத்தரணிகள் உயர்நீதி மன்றத்தில் முன்னிலையாவர்.